Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபாற்பெட்டி எண். 49
போன் 389

மலர் 9
இதழ் 318
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 12 ரம்ழான் 24 புதன்கிழமை (27-12-67)

# வடபகுதியிலிருந்து 400க்குமேற்பட்ட ஆசிரியர் இடமாற்றம்

## இதுவரை 146 பேரே இங்கு வருவதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியிலிருந்து அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 400க்கும் அதிகமான ஆசிரியர்கள் வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர், பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோர் இதில் அடங்கியுள்ளனர்.

இதுவரை இவர்களின் இடங்களுக்கு வெளிமாகாணங்களிலிருந்து வரும்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# 24 கறுப்பு சந்தைக்காரர் இம்மாதம் சிக்கினர்

## கொள்ளைலாபம், பதுக்கல் செய்ததாக இவர்கள் மீது வழக்கு

— நமது நிருபர் எம். எஸ். துரைராஜா —

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம் பொலிசார் நடத்திய திடீர் பரிசோதனையில் இருபத்தி நான்கு கறுப்புச்சந்தை வியாபாரிகள் சிக்கியுள்ளனர்.**

பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இரு வியாபாரிகள் மீது தீப்பெட்டியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலாக விற்றதாகத் தொடரப்பட்ட வழக்குகளில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மற்றும் 22 வர்த்தகர்கள் மீதும் வழக்குத் தாக்கல் செய்ய பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாட்டு விலையை மீறியதாகவும், சாமான்களைப் பதுக்கி வைத்ததாகவும், ஆறு வர்த்தகர்கள் மீது பொலிசார் வழக்குத் தாக்கல் செய்வார்கள்.

மல்லாகம், பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் தான பல வியாபாரிகள் பொலிசாரிடம் சிககியுள்ளதாகத் தெரியவருகிறது. வெங்காயம், பால் உணவு, மல்லி ஆகியவற்றை கூட்டி விற்றதற்காகவே அதிகமான வியாபாரிகள் அகப்பட்டுள்ளனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரிசோதனை நடாத்தி வருகின்றனர்.

### ரூபா 100 அபராதம்

பருத்தித்துறையில் தீப்பெட்டி ஒன்றை விலைக்கட்டுப்பாட்டை மீறி அதிக விலைக்கு விற்றவர்த்தகருக்கு பருத்தித்துறை நீதிபதி 100 ரூபாய் அபராதம் விதித்தார்.

நாணய மதிப்புக் குறைப்பையும், சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தையும் காரணமாகக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்களைக் கைதுசெய்யுமாறு யாழ்ப்பாண சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் திடீர் உத்தரவைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிசார் நடத்திய திடீர் வேட்டையிலேயே இவ்வர்த்தகர் பொலிசாரிடம் சிக்கிக்கொண்டார்.

### பாதிக்கப்பட்டவருக்கு மீண்டும் மா

கொடிகாமம், புதன்

கொடிகாமப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இரண்டாவது தடவையாக நாளை இலவச மா வழங்கப்படவிருக்கிறது. குடிபெயர்ந்து வேறு இடங்களில் வசிப்பவர்களுக்கு மட்டுமே இலவச மா வழங்கப்படும்எனத் தெரியவருகிறது.

இப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 65 குடம்பங்கள் தொடர்ந்து பாடசாலைகளிலும் ஆஸ்பத்திரியிலும் வசித்து வருகின்றன.

முதலாவது

### ஆஸி-இந்திய கிரிக்கெட் டெஸ்ட்

அடிலெயிட், டிச. 26

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இங்கு நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியின் விவரங்கள் பிவருமாறு:-

ஆஸ்திரேலியா முதல்இன்னிங்ஸ்: 335 ரன்கள்.

இந்தியா முதல் இன்னிங்ஸ்: 307 ரன்கள்.

ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸ்: 6 விக்கெட் நஷ்டத்துக்கு 305 ரன்கள்.

மாஸ்கோவில்

## பலமாடிக்கட்டிடத்தில் வெடிவிபத்து

மாஸ்கோ, டிச. 26

மாஸ்கோவில் பல மாடிக் கட்டிடமொன்றில்ஏற்பட்ட வெடிவிபத்தால் ஒன்பதிலிருந்து இருபது பேர் வரை மாண்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

50 மாடிகள் இந்த வெடிவிபத்தினால் சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் உபயோகிக்கப்பட்ட காஸ் வெளியேறியதாலேயேஇந்த விபத்து நேர்ந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண

### ஹோட்டல் சொந்தக்காரருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு பிரபல ஹோட்டல் சொந்தக்காரரை நேற்று வடபகுதிப் பொலிஸ்சுப்ரீண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்த ஹோட்டல் துர்நடத்தைகளுக்கு இடமளிப்பதாகத் தெரிவிக்கப்பட்ட பல புகார்களைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு எச்சரிக்கை [illegible]

இந்த ஹோட்டலில்

மேலும் துர்நடத்தைகளுக்கு இடமளிக்கப்பட்டால் தாம் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சுப்ரிண்டன் எச்சரிக்கை செய்தாரெனவும் அறியப்படுகிறது.

[வி. நி]

காணிச் சொந்தக்காரரின்

## அத்தாட்சிபத்திரம்பெருமலே வெள்ளநிவாரணம் பெறலாம்

யாழ்ப்பாணம், புதன்

வெள்ளத்தினால் வீடுகளை இழந்த ஹரிஜன மக்கள் காணிச் சொந்தக்காரரின் அத்தாட்சிப்பத்திரம் பெருமலே நிவாரணம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நடவடிக்கை எடுத்துள்ளார்.

கோவில் காணிகளிலும் நிலச்சுவாந்தார்களின்காணிகளிலும் குடியிருந்துவந்த ஹரிஜன மக்கள் வெள்ளத்தினால் வீடிழந்ததைத் தொடர்ந்து காணிச்சொந்தக்காரர்களிடம் அத்தாட்சிப்பத்திரம் பெறவேண்டுமென்றும், அப்படியானால் தான் நிவாரணம் கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபரை நேற்று சந்தித்து இவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைபற்றி விளக்கிக்கூறிய முன்னாள் மேயர் திரு. எஸ். நாகராசா நிவாரணம் வழங்குவதில் உடன்நடவடிக்கை எடுக்கும்படி கோரியதாகவும் தெரிகிறது.

பிறருடைய காணியில் வசிப்பவர்கள் தமதுசொந்தச்செலவில் வீட்டைக்கட்டினார்கள் என்றும், நியாயமான காலம் அதில் வாழலாம் என்றும் நிருபிக்கப்பட்டால் வெள்ள நிவாரணம் பெறுவதற்கும், வீட்டின் ஒருபகுதி பாதிக்கப்பட்டவர்கள் காணிச் சொந்தக்காரரின்அத்தாட்சி பெருமலே சிறு திருத்தம் செய்வதற்கும் பண உதவி பெறலாமென்றும் உத்தரவிட அரசாங்க அதிபர் சம்மதித்துள்ளதாகவும் திரு. நாகராசா கூறினர்.

### அரிசிவிலைக்குறைப்பு விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் அரிசி விலையில் ஏற்பட்ட திடீர் விலை உயர்வு காரணமாக யாழ்ப்பாண பொலிஸ் சுப்பிறிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாண அரிசிமில் முதலாளிகளுடன் நடத்திய மகாநாட்டின் முடிவின்படி இப்பொழுது பல மில் முதலாளிகள் அரிசி விலையை முன்னர் இருந்ததை விடக் குறைவாக விற்பனை செய்வதாகத் தெரிகிறது.

இம் மாகாநாட்டின் பயனாக இப்பொழுது ஒரு கொத்து அரிசி 1 ரூபாய் 10 சதத்திற்குப் பெறக் கூடியதாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

அரிசியின் விலையை வடமாகாணம் முழுவதும் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை விஸ்தரிக்கும் பொருட்டு மீண்டும் மில் முதலாளிகள் மகாநாடு நடத்தப்படவிருப்பதாக பொலிஸ் சுப்பிறிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் எமது நிருபரிடம் கூறினர். (வி. நி)

### விதைகிழங்குபற்றி விவசாயஅதிகாரி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு சுன்னகத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் 1000 அந்தர் விதை கிழங்குகள் இலவசமாக வழங்கப்படமாட்டாதெனவும், விலைக்கே வழங்கப்படவுள்ளதாகவும் வேண்டியவர்கள் விவசாயப் பகுதியுடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகளை பாதிக்கப் பட்டவர்களுக்கு இலவசமாக வழங்க வடபகுதி மேலதிகாரிகளுக்குஇ-னும் உத்தரவு கிடைக்க

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கங்கையிலும் காவிரியிலும் எவ்வளவு தரம் மூழ்கினுலும், மனத்துள்ளே இருக்கும் வஞ்சனை பொருமை முதலிய மாசுகள் நீங்கா. தியானம்தான் மேலான கங்காஸ்நானமாகும்.

—ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 12ம் திகதி [27-12-67[


## ஏன் இந்த அநீதி?

வடபகுதியில் சமீப வெள்ளத்திலே நெற்பயிர்ச் செய்கையாளருக்கு அதிகமான சேதம் ஏற்பட்டிருப்பினும் 2275 ஏக்கருக்கான விதை நெல்லைமட்டுமே இலவசமாகக்கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளதாக நேற்று ஒரு செய்தி தெரிவித்தது.

ஐந்து ஏக்கருக்குக் குறைவான நெற்பயிர்ச் செய்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ரூ. 150க்கு மேல்ம தவருமானமுள்ள நெற்பயிர்ச்செய்கையாளருக்கும் இலவச விதை நெல் வழங்கப்படமாட்டாதாம் இது உண்மையாயின், இதனுல் உதவி பெருத மக்களுக்கு அநீதி செய்வதுடன் உணவு உற்பத்தியையும் பாதிப்பதாகும்.

வடபகுதியில் கமக்காரரில் பெரும்பாலோருக்கு குறைந்த அளவு நிலமே உண்டு. ஐந்து ஏக்கருக்குக் குறைவாகவுள்ளவர்களே அதிகம். அவர்கள் பொதுவாக ஏழைகள். இயற்கையால் எதிர்பாராதபடி ஏற்பட்ட இந்த நாசத்தை அவர்களால் தாங்கி சமாளிக்க முடியாது. தங்கள் பெண்டு பிள்ளைகளின் நகை முதலியவற்றை அடகு வைத்து கமம் செய்யும் இந்த எளிய மக்களுக்குத்தான் உதவி அவசியம் தேவை. அவர்களுக்கு மட்டும்ஏன் உதவி மறுக்கப்படவேண்டும்?

மாதம் ரூ. 150சம வருமானமுள்ளவர்களை அரசாங்கம் செல்வந்தர்களென்று மதிக்கிறதா? வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள இக்காலத்தில், கமக்காரர்கள் அதிக கடன்பட்டுவருகிறுர்கள். நெல்லைவிதைத்து வெள்ளத்தில் இழந்து மனவேதனைப்படும் யாருக்கும் எவ்வித வேற்றுமையின்றி ஒரே சீராக உதவியளிக்க வேண்டியதே அரசாங்கத்தின் கடமை. அதிக நிலம் வைத்துக்கொண்டுள்ள செல்வந்தர்கள் இக்கஷ்டத்தை ஓரளவு தாங்க முடியலாம். ஏழைகளால் முடியாது. ஆகவே சிறப்பாக எளிய கமக்காரர்களுக்கும் இந்த உதவியை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேம்.

வெள்ளத்தால் நஷ்டமடைந்த எல்லாருக்கும் இலவச உணவு அளிக்க அரசாங்கத்திடம் பணமில்லையா? உணவு உற்பத்தியைப் பெருக்கி, தன்னிறைவு அடையவேண்டுமென்பதை தனது முக்கியமான முதல் கொள்கையாகக் கொண்டிருப்பதாகப் பன்முறையும் அறிவித்துவரும் அரசாங்கம் இவ்விஷயத்தில் 'பொய் சிக்கனத்தை'க் காட்டக்கூடாது. அப்படிக் காட்டுவது நாட்டின் உணவு உற்பத்தியைப் பெரிதும் பாதிப்பதுடன், வறிய கமக்காரரிடையே மனக்கசப்பும், அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மையும் ஏற்படுவதாக இருக்கும்.

வெள்ளத்தால் கஷ்டநஷ்டமடைந்தவர்களுக்கு இலவச மாவு முதலியன விநியோகித்ததில் சில ஊழல்கள் ஏற்பட்டுள்ளதாயும், பல ஏழைகளுக்கு உதவி கிடைக்காமல், நஷ்டமடையாத செல்வாக்குள்ளவர்களுக்கு உதவி கிடைத்துள்ளதாயும் புகார்கள் பகிரங்கமாகக்கூறப்படுகின்றன. அரசாங்க அதிபரும் இதை வன்மையாகக் கண்டித்துள்ளதாகத் தெரிகிறது. இது வெட்கப்படவேண்டிய விஷயம். எப்படியும் கஷ்டநிவாரணம் கிடைக்கவேண்டிய நஷ்டமடைந்த ஏழைகளுக்கு, எக்காரணம்பற்றியும் உதவி மறுப்பது பெரும் பாவம். இது பற்றி வரும் புகார்களை அரசாங்க அதிபர் கவனித்து இந்த அநீதியை நீக்க விசேஷ ஏற்பாடு செய்யவேண்டிய தவசியமாகும்.

## கார்க்கியின் நூறுவது பிறந்ததினம்

மாஸ்கோ, செவ்வாய் சோஷலிஸ யதார்த்த இலக்கியத்தின் ஸ்தாபகரும் மாபெரும் தொழிலாளி வர்க்க எழுத்தாளருமான மார்க்ஸிம்கார்க்கி [1868—1936]யினது100வது பிறந்த தினக்கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. உலக சமாதான ஹவுன்ஸிலின் முடிவின்படி, கார்க்கியினது பிறந்த தினமும் [மார்ச் 28]. எல்லா நாடுகளிலுமுள்ள சமாதானத்திற்கும், நல்லுறவுக்குமாகப் போராடுபவர்களினுலும், பொதுமக்களினுலும் 1968-ல் அனுஷ்டிக்கப்படவிருக்கும் ஞாபகார்த்த கலாச்சார தினங்கள் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டுள்ளன. கார்க்கியின் 100-வது பிறந்ததின விழா ஒரு ஒழுங்குகளைக் கவனிக்கவென, பிரபல சோவியத் எழுத்தாளரான கொன்ஸ்ரான்றைன்பெடின் தலைமையிலான அகில யூனியன் குடியரசுவிழாக்கமிட்டியொன்று ஏற்றடுத்தப்பட்டுள்ளது. இத்தகைய கமிட்டிகள் சகல யூனியன் குடியரசுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன, அல்லது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

கார்க்கியினுடைய எழுத்து, புரட்சிக்குப் பிந்திய ருஷ்ய இலக்கியத்தில் மட்டுமன்றி, சோவியத்களின் தேசிய இலக்கியங்களின் எழுச்சியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடகாசிரியர்கள் ஆகியோரின் நண்பனுகவும் ஆசிரியனுகவுமிருந்தார் கார்க்கி. இதனுல்தான் சோவியத் குடியரசுகள் அவரது சிருஷ்டிகளினதும், இலக்கியத் திறனுய்வுகளினதும் புதிய மொழிபெயர்ப்புக்களை இந்த 100-வது பிறந்ததின விழாவின்போது பிரசுரித்து அவருக்குத் தங்கள் கௌரவத்தையும், மதிப்பையும் தெரிவித்துக்கொள்கின்றன. உதாரணமாக உக்ரேனியப் பிரசுராலயங்கள், கார்க்கியின் உலகப் புகழ்பெற்ற சிருஷ்டிகளான ''அன்னை'', ''பல்கனின் கீதம்'', 'லெனின்'', ''புயற் கழுகு'' ஆகியவற்றையும், அவரது சிறந்த சிறுகதைத் தொகுப்புகளையும் விழாப்பதிப்புகளாக வெளியிடுகின்றன.

# தமது நாடு திரும்புவதில் கிரேக்க மன்னர் உறுதி

ரோம், டிசெ. 26 ரோமிலிலுள்ள கிரேக்க மன்னர்கள் கொன்ஸ்டன்டைனை, அவருக்கும் கிரேக்க அரசாங்கத்துக்குமிடையே சமரசம் ஏறபடுத்தமுயற்சிப்பவரும், அவருடைய நெருங்கிய நண்பருமான ஓய்வு பெற்ற விமானத தளபதி ஒருவர் நேற்றுக் கண்டு பேசினூர்.

கிரீசுக்கு திரும்புவது பற்றி மன்னர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக மன்னரின் நண்பர், பின்னர் தெரிவித்தார். மன்னருடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு, அவர் மீண்டும் அதென்ஸ் திரும்பியுள்ளார்.

### விடுதலை செய்வது தொடர்கிறது

இதற்கிடையில்நத்தாரையொட்டி அரசியற் கைதிகளை விடுதலை செய்வதை கிரேக்க அரசாங்கம் தொடர்ந்து நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்கு கடிதங்கள்

## நாவற்குழி மதகை விரைவில் திருத்துக

'பெருவெள்ளம் போட்டதினுல் கண்டி வீதியிலுள்ள நாவற்குழி மதகு ஒன்று சேதமுற்றுள்ளது. இதனுல் நாவற்குழி ஊடாகச் செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சாதாரண பஸ்களை கோப்பாய்—கைதடி ஊடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. இப் பாதையால் இரட்டைத்தட்டுபஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாததினுல் பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். கைதடி—உணுவில் போன்ற இடங்களிலுள்ள பிரயாணிகள் மூன்று நான்கு மணித்தியாலங்கள் காத்துநின்றே பஸ்ஸில் பிரயாணம்செய்யமுடிகிறது. கைதடியிலுள்ள ஆஸ்பத்திரிக்குவரும் நோயாளிகளும் துண்டிக்கப்பட்ட போக்குவரத்தினுல் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். இப் பிரயாணிகளின் கஷ்டத்தைப் போக்கி போக்குவரத்தை இலகுபடுத்த நாவற்குழி மதகு விரைவில் திருத்தப்படவேண்டும்

பொதுமராமத்து வேலைப் பகுதியினர் தங்கள் கஷ்டங்களையும் பாராது பொதுமக்களின் நன்மையையும் வசதியையும் கருத்தில் கொண்டு கூடிய விரைவில் இம்மதகைத் திருத்திப் போக்குவரத்தை சீர்ப்படுத்த உதவுவார்களா?

ப. சந்திராசேகரம்

கைதடி.

ஃ

## தீவுப்பகுதி நோயாளர் கஷ்டம்

தீவுப்பகுதியில் பெரிய வைத்தியசாலையாக இருக்கும் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் போதிய வைத்தியர்கள் இல்லாததால் நோயளிகள் பெரிதும் கஷ்டமுறவேண்டியேற்படுகிறது.

இரு தினங்களுக்குமுன்பு நூற்றுக்குமேற்பட்டநோயாளிகள் 'கியூ' வரிசையில் வெகு நேரம்வரை காத்திருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஒரு வைத்தியர் வார்ட்டில்இருக்கும் நோயாளிகளை பார்த்தபின்புதான், வெளிநோயாளிகளைப் பார்க்கவேண்டிய நிலையில் இருந்தார். இதனுல் சுமார் 2 மணிக்குமேலதான் நோயாளர்கள்வீடுசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே இதுவிஷயத்தில் கூடிய கவனம் எடுத்து சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களா?

செல்வம்.

ஊர்காவற்றுறை.

## இன்றைய பலன்

[27-12-67]
புதன்கிழமை
மார்கழி மீ 12 உ

நட்சத்திரம்- சுவாதி பகல் 12-07 மேல் விசாகம்.

திதி- ஏகாதசி மாலை 6-10 மேல் துவாதசி.

சுபநேரம்- 4-54—6-24.

ராகுகாலம்- 12-24—1-54

மேஷம்-, மதிநுட்பம் இராசோபசாரம்.

ரிஷிபம்- அரசபயம், ஆத்திரத்தை அடக்கு.

மிதுனம்- சமயோசித புத்தி, தாராள சித்தி.

கடகம்- விளைச்சல் மிகுதி, விரைவில் முன்னேற்றம்.

சிம்மம்- வீரவாழ்வு, பரிசுமுண்டு.

கன்னி- நிர்ப்பந்தநிலை, நிதானம் வேண்டும்.

துலாம்- நதிதைவேகம், சந்ஙர்ப்பம் சதிசெய்யும்.

விருச்சிகம்- கனதனமுண்டு காரியத்தில் கண்வை.

தனுசு- புனைந்துரை கேட்டல், பொறுமைக்கு சோதனை.

மகரம்- அன்னைமொழி அமிர்தம், அடக்கம் நன்று.

குமபம்- கல்விச்சிறப்பு, கலாரசனை.

மீனம்- சந்தேகம்தவிர், சமரசம் நன்று.

— சோதிடக்கலாநிதி —

[5-ம் கலத் தொடர்ச்சி]

யிருக்க, இலங்கையிலும், 'ஜாப்னு' என்று அன்னியர் வைத்த கோணல் பெயரை அடியோடுமாற்றி, 'யாழ்ப்பாணம்' என்றே பூகோளப் படங்களிலும், போடச் செய்யவேண்டும். ஆங்கில வெளியீடுகளிலும், 'யாழ்ப்பாணம்' என்றே இனி குறிப்பிடச் செய்யவேண்டும். இதற்கான முயற்சியை இங்குள்ள தமிழ்த்தலைவர்கள் செய்வார்களா?

ஃ ஃ ஃ

பரந்தபாரிடம் ஊரிடைப் பலி பற்றிப்பார்த்துண்ணுஞ்
சுற்ற மாயினீர்
தெரிந்த நான்மறை
யோர்க்கிடமாயதிருமிழலை
இருந்து நீர் தமிழோடிசை
கேட்கும் இச்சையாற்
காசுநித்தல் நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே.

—ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[திருவீழிமிழலையுள் நீர் இனி திருந்து இசையைத் தமிழோடு கேட்கும் விருப்பத்தால் அத்தகைய தமிழைப்பாடியோர்க்கு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்) பொற்காசினை நாள்தோறும் வழங்கினீர். அதுபோல அடியேனுக்கும் அருள்செய்வீர்.]

## ஐயரான் எழுதுவது

சென்னையிலே அடுத்தவாரம் நடைபெற இருக்கும் தமிழ் இருவிழாவிலே பிரமமாண்டமான ஊர்வலம் நடக்கப் போகிறதாம். தமிழகத்தின் சிறப்பை, அதன் சுவைமிகுந்த சரித்திரத்தை, கலை நிகழ்ச்சிகள் பலவற்றை மீண்டும் உயிர்ப்பிக்கும்காட்சிகள் அந்த ஊர்வலத்தில் காட்ட, சென்னையிலுள்ள பல சினிமா ஸ்ரூடியோக்களும் மிக முழுரமாக ஈடுபட்டுள்ளதாக தமிழகத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

பாரதியார், பாரதியின் இன் கவிச்சுவைக்கு தாஸனுகிவிட்ட பாரதிதாசனுர், கவிநாயகமான கவிமணி, இவர்கள் நின்றுவரும் காட்சிகளை ஒரு ஸ்ரூடியோவில் தயாரித்து வருகிறுர்களாம்.

''யானைகள் ஓரிடத்தில் போரடிக்கின்றன. வள்ளல் பாரி முல்லைக் கொடியை மெதுவாக, அதற்கு வலி ஏற்படாமல் எடுத்து தேரின் மீது படர விட்டுக் கொண்டிருக்கிறுர். மற்றோரிடத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் கைகளில் காவியம் உருவாகி வருகிறது. மிதிலா நகர் வழியே பவனிவரும் தசரதகுமாரன் முனிவரைப் பின்தொடருகிறுன் உப்பரிகையிலிருந்து சீதாதேவி மகிழ்ச்சி ததும்பப் பார்க்கிறுள். கண்ணேடு கண் நோக்குகிறது. தெய்வீகக் காதல் அரும்பி ராமாயணமும் பிறக்கிறது. சீதையில்லாவிட்டால் ராமாயணம் ஏது?

ஃ ஃ ஃ

தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்பிய போப் கால்டுவெல், வீரமாமுனிவர் இவர்கள் மூவரும் மீண்டும் உயிர் பெற்று விட்டது போல் காட்சியளிக்கின்றுர்கள்.

மனுநீதிச் சோழன், மார்கழியிப் பாவை நோன்புக்காக அதிகாலையில் நீராடச் செல்லும் கன்னிப் பெண்கள், குமணன், பூம்புகார், சேரன் செங்குட்டுவன், கப்பலோட்டிய தமிழன், இன்னும் பல பல பெருமைப் படத்தக்க அழகுக் காட்சிகள் அங்கு தயாராவதைக் கேட்டதும், இப்பொழுதே அங்கு போய்க் குதிக்க மனம் தூண்டுகிறது. ஆனுல்...

ஃ ஃ ஃ

சில வருடங்களுக்கு முன் தமிழகம் சென்றிருக்கையில், சென்னையில் கவர்னராக இருந்த ஒரு வடநாட்டவர், எனது தமிழ் உடையைப் பார்த்துவிட்டு,'' இலங்கையில் தமிழர்களும் இருக்கிறுர்களா?'' என்று கேட்டார்! இலங்கை சிங்கள நாடென்றும் சிங்களவர் மட்டுமே இங்கு இருப்பதாயும் தமிழகத்திலும் பலர் நினைக்கின்றனர். நாவலரைப்பற்றிஅவர்களில் சிலருக்குத் தெரியும். அவர் யாழ்ப்பாணத்தவர் என்று அச்சிலருக்குத தெரிந்தாலும், அந்த யாழ்ப்பாணம் இலங்கைக்கு அப்பால் எங்கோ வெகுதூரத்திலிருப்பதாகத்தான் நினைத்துள்ளனர். ஏன் தெரியுமா? பூகோளப் படங்களிலே, 'ஜாப்னு' என்று ஆங்கிலத்தில் போட்டுள்ளதுதான். யாழ்ப்பாணம் என்ற சமாச்சாரம் பெரும்பாலோருக்கும் அங்குதெரியாது.

'டாஞ்சூர்' என்றபெயரை, இப்போது தஞ்சாவூர் என்று மாற்றிவிட்டார்கள். 'டின்னிவெல்லி'' என்றிருந்ததை திருநெல்வேலி என்றும் 'டிராங்குபார்' என்பதை தரங்கம்பாடி என்றும் பூகோளப்படத்திலும் சட்டபூர்வமாயும் மாற்றிவிட்டனர். அப்படி

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அந்நியர் எவரும் இந்தியாவில் காலடி எடுத்து வைக்க அனுமதிக்கப்படார்'

## ஆபத்து எங்கிருந்து வந்தாலும் எதிர்க்கப்படும் என்கிறார் இந்திரா

புதுடில்லி, டிசெ. 26

இந்தியாவின் சுதந்திரத்துக்கு எப்பகுதியிலிருந்து ஆபத்து வந்தாலும், அது உறுதியுடன் எதிர்க்கப்படும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்.

நேபா பகுதியில், எல்லைப்புற விஜயமொன்றில் சென்றுள்ள பிரதமர், அங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்நிய ஆக்கிரமிப்பாளர் எவரும் இந்தியாவில் காலடி எடுத்துவைக்க அனுமதிக்கப்படமாட்டார் என்று பிரதமர் இந்திரா மேலும் வலியுறுத்தினார்.

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஆற்றலுடன் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினரையிட்டு நாடே பெருமைப்படுவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பை அளிக்குமாறு அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

## மேற்கு வங்காளத்தில் தொழிற் தகராறுகள்

### இப்போது இல்லை என்கிறார் புதிய தொழில் மந்திரி

கல்கத்தா, டிச. 26

மேற்கு வங்காளத்தில் தொழிற்தகராறுகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும், தொழிற்துறையில் அமைதி நிலவுவதாகவும், அந்தராஜ்யத்தின் தொழில் மந்திரி தெரிவித்துள்ளார்.

புதிய மந்திரிசபை பதவிக்கு வந்ததிலிருந்து 'கேரோ' முறைக்கிளர்ச்சி ஒன்றுவது நடைபெறவில்லையென்றும், கேரோக்களை தமது அரசாங்கம் பொறுத்துக்கொண்டிருக்காது என்றும் அவர் கூறினார்.

#### முன்னாள் முதல்வர் அறிவிப்பு

இது இவ்வாறிருக்க, முன்னாள் மேற்கு வங்காளமுதல் மந்திரியும், ஐக்கிய முன்னணியின் தலைவருமான திரு. அஜொய்முக்கர்ஜி, தமது கட்சியின் சட்ட மறுப்பு இயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணித்திட்டத்தின் மூன்றுவது கட்டம், அடுத்தமாதம் மூன்றுவது வாரத்தில் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### சோவியத் பிரிட்டிஷ் வர்த்தகம்

லண்டன், டிசெ. 26

சோவியத் யூனியனுக்கும், பிரிட்டனுக்குமிடையேயான தொழில் நுட்பக் கூட்டுறவினதும், வர்த்தக உறவுகளினதும் விருத்தி, பிரிட்டிஷ் கைத்தொழிலின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் கைத்தொழிலதிபர்களைக் கொண்ட பெரிய தூதுக்குழு ஒன்றின் சோவியத் யூனியன் விஜயத்திற்குப் பின்னர், இந்த அபிப்பிராயம் லண்டன் வர்த்தக வட்டாரங்களில் நிலவுகிறது.

பிரிட்டிஷ் கைத்தொழில் சம்மேளனத்தின் பிரமுகர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில், சம்மேளனத்தின் கவுன்சில் 1968 ஜனவரி 24-ல் விசேஷ மகாநாட்டைக் கூட்டத் தீர்மானித்திருப்பதாயும், சோவியத் யூனியனுடனான கூட்டுறவை விஸ்தரிப்பதில் அக்கறையுள்ள சுமார் நூறு கம்பனிகள் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாயும் சொன்னார்.

புதுடில்லி, டிச. 27

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கென ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தமிழை இல... பாடமாகப் படிக்க... இங்கு ஏற்பாடுசெய்யப்... டுள்ளது.

## கொய்னு நகரில் மீண்டும் நில அதிர்ச்சி

### முன்னைய பூகம்ப சேதம் பற்றி முதல்வர் தகவல்

லக்னோ, டிசெ. 26

இரு வாரங்களுக்கு முன் கடும் பூகம்பத்தால் பலத்த உயிர், உடைமைச் சேதம் ஏற்பட்ட கொய்னு நகரிலும், சுற்றுப்புறத்திலும், நேற்றிரவு 11 மணிக்குச் சற்றுப்பின்னதாக சிறிய அளவில் இரண்டு நில அதிர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன.

மக்கள், பீதியில் தமது இல்லங்களை விட்டு வெளியே ஓடினர். ஆனாலும், உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

#### முதல்மந்திரி தகவல்

கோராஷ்டிர முதல்மந்திரி திரு. நாயக், கடந்த 11-ந் திகதி நடைபெற்ற பூகம்பத்தில் இறந்தவர்களின் தொகை 171 என்று அறிவித்துள்ளார். 2071 பேர் காயமுற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

பூகம்பத்தால் சுமார் 400 சதுர மைல் பரப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 2 லட்சத்து 64,000 மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டியுள்ளதாக தாகவும் முதல்மந்திரி மேலும் அறிவித்துள்ளார். 47,000 வீடுகள் சேதமுற்றுள்ளன.

#### காத்மாண்டிலும்

நேபாளத்தின், தலைநகரான காத்மாண்டுவிலும் நேற்றிரவு பூகம்பமொன்று ஏற்பட்டது. இது 3 வினாடிகள் நீடித்தது.

எவ்வித உயிர்ச்சேதமோ அல்லது பொருட்சேதமோ இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## பெத்லெஹெமில் நத்தார்

### அரபு எதிர்ப்பினால் பண்டிகை பாதிக்கப்பட்டது

ஜெருசலம், டிசெ. 26

புனித நகரான பெத்லெஹெமில், இம்முறை நத்தார் கொண்டாட்டங்கள் சோபையிழந்து காணப்பட்டன.

வழக்கமாக 12.000 கிறிஸ்தவர்கள் தொழுகை நடத்தும் இந்நகரில், இம்முறை ஆக 5,000 பேரே வந்திருந்தனர்.

அரபுக் கிறிஸ்தவர்கள், நத்தார் விழாவைப் பகிஷ்கரித்தனர்.

புனித நகர், இஸ்ரேலியரால் பிடிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து அரபியர்கள் நடத்திய எதிர்ப்பு இயக்கத்தின் விளைவாகவே, இம்முறை நத்தார் பண்டிகையில் கலந்து கொண்டவர்களின் தொகை மிகவும் குறைந்துள்ளது.

## ஷேக் அப்துல்லா மீதான தடைகள் நீக்கப்பட்டன

### கட்டுப்பாடுடனான சுதந்திரம் என்பது அவர் கருத்து

புதுடில்லி, டிசெ. 26

முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா மீதான தடைகள் யாவும் விலக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்போது, அவர் பொதுக் கூட்டங்களில் பேசவும், வெளிநாட்டவரையும், பத்திரிகையாளரையும் சந்திக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், இது பற்றி டில்லி மாஜிஸ்திரேட்டிடம் ஷேக் அப்துல்லா எழுதியுள்ள கடிதமொன்றில், தமக்களிக்கப்பட்டுள்ளது 'கட்டுப்பாடுடனான சுதந்திரமே' என்று தெரிவித்துள்ளார். அதைத் தாம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். டில்லிக்குள் மட்டுமே தமக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## உயிரை உறைய வைத்து ஆயுளை நீடிக்கும் சிகிச்சை

### ஆராய்ச்சி நடைபெறுகிறது

மாஸ்கோ, டிச. 26

சிலமாதங்களுக்கு முன்னர் பரபரப்பூட்டும் ஒரு செய்தி உலகப் பத்திரிகைகளிலே அடிபட்டது. குணப்படுத்த இயலாத ஒருவகைப் புற்று நோயால் அவதியுற்றுவந்த விஞ்ஞானி ஒருவர், புற்று நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்தொன்று கண்டுபிடிக்கும்வரை, தன்னை உறைநிலையில் வைத்திருந்து பின்னர் எழுப்புமாறுவேண்டுகோள் விடுத்திருந்தார் என்பதுதான் அந்தச்செய்தி. உறைநிலையில் வைப்பதன் மூலம், ஆயுளை நீடிப்பதென்ற கருத்து மேலைய நாடுகளில் பலரிடமும் பரவியுள்ளது. 'ஆயுள்நீடிப்பு வாஷிங்டன் சங்கம்' என்பது ஓர் இயக்கத்தையே நடத்தி வருகிறது.

உறை நிலை என்பது ஓர் உயிர்ப் பொருளின்-அதன் திசுக்கள், உறுப்புக்கள் ஆகிய அனைத்தின் செயல்முறைகளும்-நன்கு ஒடுங்கிய நிலை; அதாவது வாழ்விற்கும் சாவுக்குமிடையே ஒரு மெல்லிய இழையில் அது நடைபோட்டிருக்கும் ஒரு நிலை. நுண்ணுயிர் பிராணிகள பலவும், பூச்சிகளும், சில பிராணிகளும்கூட உதாரணமாக, கரடிகள், வௌவால்கள்போன்றவை குறிப்பிட்ட காலத்திற்கு இவ்வித ஒடுங்கியநிலையில் இருக்கும் திறன்படைத்திருப்பதை இயற்கையில் காண்கிறோம். அந்தநிலையில் இருதயத்துடிப்பும், சுவாசமும், வளர்சிறை மாற்ற நிகழ்ச்சிகளும் ஒடுங்கிய நிலையையடைகின்றன.

#### பரீட்சார்த்த உறக்க நிலை

சுற்றுப்புறத்திற்குத் த... அமையும் இயற்கை 'அனு... [illegible]

விஞ்ஞானிகள் அவ்வித நிலையை ஏற்படுத்துகின்றனர். ஆனால், தற்போதுள்ள விஞ்ஞான வளர்ச்சி மட்டத்தில், ஒரு மனிதனை மிகக் குறைந்த உஷ்ண நிலையில் 'உறைய' வைத்துப் பின்னர் உயிரூட்டுவது என்பது முடியாத காரியம். அவ்வாறு யாரேனும் செய்ய முயன்றால், அது தற்கொலைக்கு ஒப்பானதேயாகும்.

விஞ்ஞானக் கற்பனைக் கதைகளில், இந்த உறைநிலையை உபயோகித்து, மனிதனைப் பிற கோள்களுக்கு அனுப்பலாம் என்று கூறப்படுகிறது. உறைநிலையின்போது, உயிர்ப்பொருள் முதுமையடையும் நிகழ்ச்சி மிக மெதுவாகவே நடைபெறுகிறதென்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டே அப்படிப்பட்ட கற்பனைகள் புனையப்படுகின்றன என்றாலுங்கூட, இது வெறுப் கற்பனை மட்டுமே அல்ல. 'உறைநிலைத்தூக்கம், அல்லது 'அனுபயாசிஸ்' என்பது பிரதானமாக, அறுவை சிகிச்சைத் துறையில் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது கணக்கீடுகளின்படி சோவியத்யூனியனில் மட்டுமே, இருதய அறுவைச் சிகிச்சை தேவைப்படும்நபர்கள் ஏறக்குறைய 800,000 பேர் உள்ளனர். இவர்களில் 100,000 க்கும் குறைவானவர்களுக்கே இருதய அறுவை செய்யப்பட்டுள்ளது. இதற்குமுக்கியமான காரணம், இருதய அறுவை என்பது எல்லாநிபுணர்களும் செய்துவிடக்கூடிய ஒரு எளிய சிகிச்சை அல்ல. இரண்டாவது, அந்த சிகிச்சையை நடத்துவதற்கு ஒரு 'செயற்கை இருதயமும்' அதை இயக்குவதற்குப் பல நிபுணர்களும் தேவைப்படுகின்றனர். அதிக அளவில் மாற்று இரத்தமும் வேண்டியிருக்கிறது.

ஓர் ஆராய்ச்சிக்கூட... இந்த இக்கட்டுக்களைத் தவிர்ப்பதற்காக, 'செயற்கைஇருதயம்' இன்றியே, நோயாளிகளின் உடலை 30 டிகிரி சென்டிகிரேடிலும் மூளையை 20 டிகிரியிலும் வைத்து, அந்த நிலையில் அறுவைச்சிகிச்சை அளிப்பதற்கானமுறை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆபத்தான புற்றுநோய்க் கட்டிகளைக் குணப்படுத்துவதற்கு ரேடியக் கதிர் முறை உபயோகப்படுத்தப்படுவது அனைவரும் அறிந்ததே. ஆனால் அப்பொழுது கட்டியை மட்டுமே அழிக்காமல், இரத்த மண்டலத்தையும் பாதிக்கிறது. இதன் காரணமாகவே, இந்த சிகிச்சையை, சில நாட்களுக்குப் பின் கைவிடவேண்டியுள்ளது! இதை நிவர்த்தி செய்வதற்கான ஒரு வழி, கதிர் வீச்சு சிகிச்சைக்கு முன்னர், எலும்பு மஜ்ஜையைத் தனியாக எடுத்து, அதை 'உறை நிலையில் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்து, சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும். உரிய இடத்தில் அவற்றை வைத்துவிடுவதேயாகும்.

கீவ் ஆராய்ச்சிக்கூடத்தில், பதினொரு நோயாளிகளுக்கு இவ்விதம் செய்யப்பட்டது. 95 தினங்கள் நடைபெற்ற கதிர்வீச்சு சிகிச்சையின் பின்னர், அவர்களது மஜ்ஜை மீண்டும் எடுக்கப்பட்ட இடத்திலேயே வைக்கப்பட்டது. கற்பனைக்... களில் மட்டுமன்றி, ... த்த வாழ்விலும், ... த்துறையில உறை... யின் பயன் உணரப்ப... ன் வருகிறது ... நிலைக் ... த்தை வேறு வகைகளிலும் ... ஞானிகள் பயன்படுத்தி கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆராய்ச்சி நூல் வெளியீடு

### 'ஒல்லாந்தர்-சேதுபதி வர்த்தக ஒப்பந்தம்'

கொழும்பு, செவ். இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் 1984-ம் ஆண்டில் இலங்கை ஒல்லாந்த அரசாங்கத்திற்கும் இரகுநாத சேதுபதிகாத்த தேவர்க்கும் நிகழ்ந்த வணிக உடன்படிக்கை பற்றிய ஆராய்ச்சி நூலினை அடுத்த வாரம் வெளியிடுகிறார். இவ்வணிக உடன்படிக்கை தமிழில் உள்ளது. இதன் மூலம் ஒல்லாந்த மொழியில் உள்ளது. இவ் ஆராய்ச்சி நூலில், வணிக உடன்படிக்கைக்குச் சாதகமான வரலாற்றுப் பின்னணி, ஆங்கில மொழிபெயர்ப்பு, எழுத்துமுறை, மொழிநடை ஒல்லாந்த மூலத்திற்கும் தமிழ்மொழி பெயர்ப்பிற்கும் உள்ள வேறுபாடுகள், கலைச்சொல்விளக்கம், விளக்கப்படங்கள் முதலிய இயல்புகள் இடம்பெற்றுள்ளன. நாறு பக்கங்கள்கொண்ட இந்த ஆங்கில நூலுக்கு இலங்கைப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைக் கல்வித்திறன் அரங்குத் தலைவர் பேராசிரியர் ஹெட்டியாராச்சி அணிந்துரை நல்கியுள்ளார்.

இந்நூல் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்க ஆதரவில் வெளியிடப்படுகின்றது ...ன் விற்பனையினுற்பெறக் ...ய ஆதாயம் பல்கலைக் ...க முருகன் கோவில் கட்டு ...ற்குப் பயன்படுத்தப்படு...ம்.

---

## இடமாற்றம்

அளவெட்டி, செவ். தெல்லிப்பழை சுகாதார வைத்தியசாலையில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் ...மையாற்றிய டாக்டர் .... பொன்னுச்சாமி ... மாதம் முதல் மந்திகை ...பத்திரிக்கு இடமாற்றம் ...ய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. சற்குரு வருகிறார்.

ஃ ஃ ஃ

சுன்னுகம் பட்டினசபைக் காரியதரிசியாகப் பல காலம் கடமையாற்றிய திரு. எ... சின்னையா ...தை ...கம் முதல் கிளிநொச்சிப் ...டின...பைக்கு இடமாற் ...செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

...ங்கேசன்துறை மக்கள் ...கியில் பல வருடங் ...ாகக் கடமையாற்றிய ... விக்னேஸ்வரன் மன்ஞா மக்கள் வங்கிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

## "சரித்திரத் திருப்பம் ஏற்பட்டுள்ளது"

— சண்.

கொழும்பு, செவ்வாய் "முதல் தடவையாக இம்முறை தோட்டத் தொழிலாளர்கள் ஒற்றுமையாக மற்ற ஊழியர்களுடன் சேர்ந்துபொதுவான பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தம் செய்தார்கள். இது எமது தொழிற் சங்கத்தின் சரித்திரத் திருப்பமாகும்.

இவ்வாறு இலங்கைத் ...ொழிற்சங்க சம்மேளத் ... பொதுக்காரியதரிசி ...ு. என். சண்முகதாசன் ...ரிவித்தார் மேலும் ...வர்தெரிவித்ததாவது;— ...இன்றய வேலை நிறுத்தம் ...யிலை, றப்பர் ஆகிய ...ற்றுமதிப் பொருட்களில் ...ரு தேக்கத்தை ஏற்படுத்தி வருகிறது .சி.ரி.யு.எவ்வினுல் வெளியிடப்பட்ட இந்த இந்த வேலைநிறுத்த முறையே சரியன போராட்ட முறையாகும்.

குருநகர்

## கலைக்கழக ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் குருநகர் றெக்கிளமேஷனைச் சிரமதானத்தின் மூலம் சுத்தஞ் செய்வதற்கு குருநகர் கலைக்கழகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

இம்மாதம் 28, 29, 30-ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் குருநகர் கலைக்கழக ஆண்டுவிழாவின்போது முதல் நாள் நிகழ்ச்சியாக மேற்படி சிரமதானம் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா தலைமை தாங்குவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக குருநகர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் சித்திர சிற்பப் பொருட்காட்சி நிகழ்ச்சிக்கு திரு. ஏ. ஈ. தம்பர் தலைமை வகிப்பார்.

மூன்றும் நாள் நிகழ்ச்சி கலைவிழாவாக நடைபெறவுள்ளது. கழகத்தினர் ஏற்கனவே விளம்பரப்படுத்திய சிறுகதை, கட்டுரை, சித்திரம், நாடகம், சங்கீதம் ஆகியவற்றின் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. இந் நிகழ்ச்சிக்குயாழ். மாவட்ட அரசாங்க அதிபர்திரு வேர்ணன்அபயசேகரா தலைமை தாங்குவார். [நி]

---

## உடுவில் எம். பி. இந்தியா செல்கிறுர்

உடுவில், செவ். உடுவில் தொகுதி எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் இம்மாத இறுதியில் இந்தியாவிற்குச்செல்லவிருக்கிறுர்.

சென்னையில் ஜனவரி மாத முதற்பகுதியில் நடைபெறவிருக்கும் அகில உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகவே இவர் இந்தியாசெல்கிறுர். ——

## இவரது கட்டுரையும் இடம் பெறும்

புலோலி, செவ்வாய் நெல்லியடி மத்தியமகாவித்தியாலய தமிழ் விரிவுரையாளரான பண்டிதர் திரு. க. வீரகத்தி அண்மையில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு அனுப்பியிருந்த 'சொல் இலக்கணத்தில் யாழ் இலக்கணத்தின் செல்வாக்கு' என்னும்ஆராய்ச்சிக் கட்டுரை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. ——

## விவசாயிகள் கஷ்டம்

பரந்தன், செவ்வாய் கிளிநொச்சி, பரந்தன், கண்டாவளை, குமரபுரம், முரசுமோட்டை, ஆனையிறவு, தருமபுரம் ஆகிய இடங்களில் உணவுப் பொருட்களின் விலை விஷம்போல் ஏறியுள்ளது. இதனுல் இப்பகுதி மக்கள் குறிப்பாக விவசாயிகள் மிகவும் கஷ்டப் படுகிறுர்கள்,

ஒருகொத்து அரிசி விலை இரண்டு ரூபாய்க்கும் கிடைப்பது அரிதாக இருக்கிறது. பால்மா, தீப்பெட்டி முதலிய பொருட்களும் பெறுவது கஷ்டமாகஇருக்கிறது. ——

## டெலிபோன் கிடைக்கும்

அளவெட்டி, செவ். மாவிட்டபுரம் உபதபால் நிலையத்துக்கு அதிவிரைவில் டெலிபோன் இணைப்புச் சேவை கிடைக்கவிருப்பதாகத் தெரிகிறது இது சம்பந்தமாக பல சங்கங்கள் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகத்தைக் கேட்டுள்ளன.

உரும்பராய் பட்டினசபை

## சோலை வரி அறவிடுதல்

### சட்டத்துக்கு அமையவில்லையாம்

யாழ்ப்பாணம், செவ்வாய் புதிய உரும்பராய் பட்டினசபைக்கு வருமதியாகக் கணக்கிடப்பட்டிருக்கும் சோலைவரி நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு, சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவேண்டிய சோலைவரி அறிவித்தல்கள் சட்டத்தின் தேவைகளுக்கு அமைவாக [வருடாவருடம்] வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படவில்லையென அறியப்படுகிறது.

எனவே, சட்டப் பிரகாரமாகவும், செயல் முறைப் பிரகாரமாகவும்அறவிடமுடியாத மேற்படி நிலுவைகளை வன்முறை மூலம் அதாவது நடுக்கட்டல் நடவடிக்கைகளால் அறவிடுவது ஏழை வரியிறுப்பாளர்களைப் பெரிதும் பாதிக்கக்கூடுமென்பதோடு, அது காரணமாக எழக்கூடிய சட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் நிலைக்கும் சபையை உட்படுத்தக்கூடுமெனச் சட்ட ஆலோசகர்கள் கருத்து வெளியிட்டிருப்பதாலும், பழைய நீர்வேலிக் கிராமசபைக்கு வருமதியாகவுள்ள சோலை வரி நிலுவைகளைப் பதிவழித்து, உரும்பராய் புதிய பட்டினசபைக்கு வருமதியாகவுள்ள தொகைகளை மட்டும் அறவிடும்படி உரும்பராய் தமிழரசு வாலிபமுன்னணிச் செயலாளர் திரு. ந. அரியரத்தினம் பட்டினசபைத் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

---

## தெல்லிப்பளை ரயில்நிலையம் விஸ்தரிக்க திட்டம்

அளவெட்டி, செவ்வாய் தெல்லிப்பளை புகையிரத நிலையம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது இப்போது இருக்கும் நிலையம் பிரயாணிகளின் போக்குவரத்துக்கு போதியதாக இல்லாத காரணத்தினுலேயே இவ்விதம் விஸ்தரிகப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இதுசம்பந்தமாகத் தம்மைச் சந்தித்த கட்சிக் கிளை செயலாயரிடம் ரயில் நிலையம் விஸ்தரிக்கப்படவிருப்பது பற்றி பிரயாணிகளுக்கு குடிநீர்வசதி மற்றும் வசதிகள் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

புகையிரத நிலையத்தை வசதியான வேறொரு இடத்துக்கு மாற்ற ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஆசிரியர் இடமாற்றம்

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக திரு. செல்வநாயகம் தெரிவிக்கையில் அசௌகரியமான சூழ்நிலையிலுள்ள ஆசிரியர்களின் இடமாற்றத்தை ரத்துச் செய்யதாம் கல்வி அமைச்சருடன் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினுர்.

---

## தந்திக் கம்பிகள்: பொலிஸார் மீட்டனர்

குரும்பசிட்டி, செவ். சுன்னுகம் பகுதியில் வெள்ளத்தால் சீர்குலைவுக்குள்ளான தொலைபேசித் தந்திக் கம்பிகள் பெருந்தொகையில் சுன்னுகம் பொலிஸாரினுல் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். ரவீந்திரராஜா இவற்றை எடுத்துவந்து பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளார். இவற்றை அவர் தபாற் தந்திப் பகுதியினரிடம் கையளிக்கவிருக்கிறுர்.

## செந்திநாதனுக்கு பாராட்டு

குரும்பசிட்டி, செவ். இரசிகமணி கனக.செந்திநாதனின் ஐம்பதாவதுவயது நிறைவையொட்டி யாழ். இலக்கிய நண்பர் கழகத்தினர் "இரசிகமணி கவிமாலை" என்ற நூலினைவெளியிடவிருக்கின்றனர். மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஜனவரி மாதம் 2-ந் திகதி இலக்கிய நண்பர் கழகத்தினர் திரு. கனக. செந்திநாதனுக்கு பாராட்டு விழாவும் பரிசளிப்பும்நடாத்தவிருக்கின்றனர்.

இவ்விழாவில் கனக. செந்திநாதனுக்குப் பாராட்டும் இச் சங்கம் நடாத்திய சிறுகதைப்போட்டியில் வெற்றி பெற்றோருக்குப்பரிசில்களும் வழங்கப்படும். பண்டிதை தங்கம்மா , அப்பாக்குட்டி, செம்பியன் செல்வன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர்,

---

## உடைந்துவிழும் நிலையில்தபாற்கந்தோர்

பரந்தன், செவ்வாய் ஐக்கிய தேசியக் கட்சி கிளிநொச்சிமாவட்ட செயலாளர் திரு. எம். எஸ். கே. இலட்சுமணன் முரசுமோட்டை உப தபாற்கந்தோர் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய அவசியத்தை தபால் மந்திரியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

சென்ற சூருவளி நேரத்தின்போது வீசிய கோரப் புயலால் தபால் நிலையக் கட்டிடம் பலமாகத் தாக்கப்பட்டுள்ளது. உடைந்து விழும் நிலையில் உள்ள இத் தபால் நிலையத்தைபுனரமைப்புச் செய்ய அரசாங்கம் இதுவரை முன்வரவில்லை. தொலைபேசிவசதிஇணைக்கப்பட்டு பலமாதங்களாகியும் தபால் விநியோகம் செய்ய இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை. பரந்தன்தபால் நிலையத்திலிருந்துதான் இப்பொழுது தபால் விநியோகம் நடைபெறுகிறது. இதனுல் இப்பகுதி மக்கள் குறிப்பிட்ட நேரங்களுக்கு தமது கடிதங்களைப் பெற முடியாத நிலையிலிருக்கின்றனர்.


1968 கலண்டர் வாங்கும் காலம் இதுவே!

பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் முதல் வித்தகர் விபுலானந்தர்— கடையில் சுவாமியார் — இலக்கணச் சுவாமியார் வரை முதன்முதல் சித்திரங்களில் வடித்து சித்திரக்கலண்டர் யுகத்தை ஆரம்பித்து வைத்த தமிழ் உலகில் ஒரே ஒரு சித்திரக் கலண்டர்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

ஓர் உலக சாதனை

இலக்கணச் சுவாமியாரை "லீலா" வில் சந்தியுங்கள்

500 சித்திரங்களுக்கு மேல் லீலாவை அலங்கரிக்கின்றன அவைகளில் இலங்கை—இந்திய — அனைத்துலக விடயங்கள் உளது.

லீலா டயறி தினிசுகள்

"அனைத்துலக விடயங்கள் லீலா கலண்டரில்"
சர் கந்தையா வைத்தியநாதன்

சர்வ சமய-சமரச சித்திரக் கலண்டர்

உங்கள் அருகாமை வியாபாரியிடம் கேளுங்கள். எங்கும் கிடைக்கும்.

யாழ்ப்பாணத்தில் தொகையாக
செ. ஆ. செ. அன் கோ - பெரியகடை.

லீலா ஸ்டோர்ஸ்

249, ஒல்காட் மாவத்த, கொழும்பு.—11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘திசைமாறும் மீனவரை மீட்க விரைவான நடவடிக்கை வேண்டும்’

## காங்கேசன்துறைப் பட்டினசபை கோரிக்கை

அளவெட்டி, செவ்வாய்

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர் திசைமாறி இந்தியக்கரையை அடைந்து விட்டால் இங்கு மீண்டும் திரும்புவதற்கு வீண் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும் இவ்வித வீண் காலதாமதம் ஏற்படாது திசை மாறிச் செல்பவர்களை விரைவாக இங்கு திருப்பி வரவழைக்க உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் பிரதமரையும் ராஜாங்க மந்திரியையும் காங்கேசந்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் காங்கேசன்துறைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியிலுள்ள வடிகால்கள் சீராக இல்லாததால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி மக்களுக்கு நஷ்டத்தை விளைவிக்கின்றதாகவும் தேங்கி நிற்கும் வெள்ளம் கடலுக்குப் போக வடிகால்களைச் சீரமைத்து வடிகால் அமைத்து வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைப் போக்க இது சம்பந்தமான அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. திட வீரசிங்கத்தால் கொண்டு வரப்பட்டு சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. வீதிகள் சீரமைப்புப் பற்றிய தீர்மானமும் நிறைவேறியது.

பட்டினசபை உபதலைவர் திரு. எஸ் வி. சீனிவாசகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, செவ்.

வல்வெட்டிதுறை புளூஸ் விளையாட்டுக்கழகமும் ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்ட விறுவிறுப்பான முதற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டி எவருக்கும் வெற்றிதோல்வி இல்லாது முடிந்தது. இரண்டு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் போட்டிருந்தன. ஆட்டத்தின் இடைவேளையின்போது வல்வெட்டித்துறை வீரர் 1—0 கோலினுல் முன்னணியில் நின்றனர். ஆனுல் ஆட்ட இறுதிப் பகுதியில் ஈவினைக்கோஷ்டிக்கு பனல்டி உதை மூலம் ஒரு கோல் கிடைத்தது. இதனுல் போட்டி சமனுக முடிவடைந்தது. இப் போட்டிக்கு திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராக கடமையாற்றினுர்.

உரும்பராய் விளையாட்டுக் கழகமும் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் பங்கு பற்றிக் கொண்ட இரண்டாம்பிரிவு உதைப்பந்தாட்டப் போட்டியும் சமனுக முடிந்தது. இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல் பெற்றுக் கொண்டன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் மேற்படி இரு ஆட்டங்களும் குரும்பசிட்டி உதய தாரகை மன்றத்தினரின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடைபெற்றன.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி நடித்த
**முகராசி**



**REGAL** JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Pedrio Armendariz in
SONS OF THUNDER
[ in color]



**திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]

28-ம் திகதி முதல்

விஜிதா [ஹட்டன்] — மொடேர்ன் [பதுளை]

சுந்தரராஜன்
நாகேஷ்
முத்துராமன்
ஜெயலலிதா
ஏ. வி. எம்.ராஜன்
நடிக்கும்

**மேஜர் சந்திரகாந்த்**


## விரைவில் புனர் வாழ்வு

அளவெட்டி, செவ்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் செனட்டர் சு. நடராசாவும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் காங்கேசன்துறைப் பகுதியில் வெள்ளத்தால் வீடு இழந்து தவிக்கும் மக்களையும் பயிர்ச் சேதங்களையும், நேரில் சென்று பார்வையிட்டனர்.

வெள்ளத்தால் கஷ்டமடைந்த மக்களுக்கு விரைவில் வெள்ள நிவாரணம் அளிக்கும்படி செல்வநாயகத்தை தெல்லிப்பளை தமிழரசுக் கட்சிக் கிளையினர் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வெள்ள அகதிகள்

காங்கேசன்துறை, செவ்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக மயிலிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தங்கியிருந்தவர்களில் இன்னும் சுமார் 10 குடும்பங்களுக்கு மேல் அங்கு எஞ்சியுள்ளனர்.

நிவாரணம்வழங்கும் வேலையில் மயிலிட்டி கிராமசேவகர் திரு. ஏ. எஸ். பத்மநாதன் ஈடுபட்டுவருகிருர். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் சுமார் 20-க்கு மேற்பட்ட அகதிகள் இருக்கின்றனர்.

## வானொலி (விசேஷ) நிகழ்ச்சிகள்

### புதன் 27-12-67

### கொழும்பு

காலை 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை,.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம் — ‘ஊருக்கு உழைத்தார்’ — சி. சண்முகம், 9-30 இசைக்கச்சேரி — என். சண்முகரத்தினம்.

### திருச்சி 1

காலை 6-55 அறவுரை — சுவாமி சித்பவானந்தா, 7-30 இசைமாலை, 8-15 பெரியசாமித்தூரன் பாடல்கள்.

பகல் 1-00 பெண்ணுலகம், 1-50 இசைமஞ்சரி.

இரவு 6-15 இசைவிழா— சென்னையிலிருந்து அஞ்சல், 8-00 இசைவிழா, 9-15 பலகணி, 9-30 இசைவிழா, 10-35 இசைவிழா.

### சென்னை 1

காலை 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம், 7-30 பாமாலை — காருக்குறிச்சி அருணுசலம் - இசைத்தட்டு,

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம்.

இரவு 6-15 இசைவிழா, 8-00 இசைவிழா, 9-30 இசைவிழா.


**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 p.m. Poya days & public Holidays at 10-30 AM
Edd Byrnes - Chris Noel in
**BEACH BALL**
(Technicolor) (Scope)
Coming Shortly
JIM REEVES in
KIMBERLEY JIM


## நோய் தடுப்பு நடவடிக்கை

வல்வெட்டித்துறை செவ்.

அல்வாய், வடமராட்சிப் பகுதிக் கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக நோய்கள் பரவாதவாறு குடிநீர் கிணறுகளுக்கு கிருமிநாசினி தெளிப்பதிலும் குடல்நோய் ஆகியன மக்களைப் பீடிக்காவண்ணம் தடுப்பு ஊசி மருந்து உபயோகிப்பதிலும் இப்பகுதி சுகாதார உத்தியோகத்தர் திரு. எஸ். சண்முகம்பிள்ளை தீவிரமாக ஈடுபட்டுள்ளார். தடுப்பு மருந்து போடுவதில் மக்கள் அதிகம் நாட்டம் காட்டாமையால் வெள்ள நிவாரணம் பெறவிருக்கும் மக்கள் நோய் தடுப்பு ஊசி போடுதல் அவசியம் என்ற கட்டாயக் கொள்கையைக் கடைப்பிடிக்க வடமராட்சி காரியாதிகாரியின் ஒத்துழைப்பைக் கோரவிருப்பதாகத்தெரிகிறது. இதுபோன்று நோய் தடுப்பு இயக்கத்தை வடமராட்சி முழுவதிலும் செய்வதற்கு சுகாதார வைத்தியதிகாரி திருமதி டாக்டர் எம். அருளம்பலமும் சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் திரு. தில்லைநாதனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ‘யாழ். ச. ச. நிலைய சமாஜத்துக்கு இடமளிக்கவும்’

அளவெட்டி, செவ்வாய்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் கிராமிய நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாண சனசமூகநிலைய சமாஜம் பங்கு கொள்ள அனுமதி தரும்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையத்தில் நிறைவேறியது.

சமாஜ செயலாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விசேஷ கூட்டத்தில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் வேறு இடத்துக்கு மாற்றலாகிச் செல்வதையடுத்து அவருக்கு பிரியாவிடை உபசாரம் ஒன்று நடத்துவது எனவும், தை மாதத்தின் நடுப்பகுதியில் சனசமூக நிலையங்களின் ஆதரவில் ஒரு கலைவிழா நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்திய நீதிக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2007

### விற்பனைக்கு

வீடு:

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் மத்திய கல்லூரிக்கும் அண்மையில், சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல. 2009 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 2009

நாவலர் வீதியிலிருக்கு கோவிந்தபிள்ளை மோட்டார் வேர்க்ஸ் என்னும் தொழிற்சாலை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, இ. கோவிந்தபிள்ளை, 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 278. 2585

### கல்வி

வகுப்புகள்

க. பொ. த. [சாதாரண/ உயர்தர] பரீட்சைக்குரிய விஞ்ஞானம், கலை, வர்த்தக வகுப்புகள் 46 வருட வர்த்தக ஆசிரியராலும், அனுபவமுள்ள லண்டன், இலங்கை, இந்திய பட்டதாரிகளாலும் 1-1-68 தொடக்கம் நடாத்தப்படும் விடுதி வசதிகள் உண்டு. உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை/ உடுப்பிட்டி. 2197

## சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

குரும்பசிட்டி, புதன்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த அப்பையாபிள்ளை நாகம்மாவை இவ்வருடம் ஜனவரி மாதம் 9-ம் திகதி இரும்புக்கம்பியால் அடித்துக்கொலைசெய்ததாக அம்பிகைபாகன் மீனுட்சி என்ற பெண்மணி மீது சங்கானைப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டபின் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நித்தசிங்கா வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினுர்.

எதிரி தரப்பில் புறக்டர் திரு. ஸி. எஸ். நாதனின் உதவியுடன் அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் ஆஜரானுர்.


ராதா மணிமார்க்
**சந்தனுதித் தைலம்**
கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.
எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
ஏகவிநியோகஸ்தர்கள்:-
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே. எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கோவிலில் இருந்த இந்தி எழுத்துக்களை அழித்தனர்

சென்னை, டிச. 25

இந்தி எதிர்ப்புக் கோஷ்டியைச்சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் சிலர் இன்று ராமநாதபுரம் ராமசுவாமி கோவில் சுவர்களிலும் தூண்களிலும் உள்ள இந்தி எழுத்துக்களையும், சம்ஸ்கிருத எழுத்துக்களையுப் அழித்தனர்,

காஞ்சி காமகோடி பீடத்துக்கும் இந்தி எதிர்ப்பாளர்கள் சென்று அங்கு எழுதப்பட்டிருந்தசமஸ்கிருத எழுத்துக்களை அழித்தனர். அவ்வெழுத்துக்கள் இந்தியல்ல சம்ஸ்கிருதம் என்று தெரிந்ததும் அவர்கள் போய்விட்டனர்.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டனைவிட

# மிகக் குறுகிய காலத்தில் அணுசோதனை வெற்றி

## சீனு பெருமிதம்

ஹங்காங், டிச. 25

''அமெரிக்கா தனது அணுசோதனைகளில் வெற்றிபெற 7 ஆண்டுகள் பிடித்தன. பிரிட்டனுக்கு 4 ஆண்டுகள் பிடித்தன. சோவியத் ரஷ்யாவுக்கு 4 ஆண்டுகள் பிடித்தன. ஆனால் 2 ஆண்டு 8 மாதங்களில் இதனை செஞ்சீனு வெற்றிகரமாகச் சாதித்துள்ளது.

இது புரட்சிகர மக்களின் வெற்றி, சீன மக்களின் மகத்தான கலாசாரப் புரட்சியின் வெற்றி. ஒரு வார்த்தையில் சொல்வதானால், மா-சே-துங் சிந்தனையின் மகத்தான வெற்றி'' என்று பீகிங் வானொலி இன்று சீனுவின் அணு சோதனைகள் பற்றி ஒலிபரப்பிய ஒரு செய்தியில் தெரிவித்தது.

அமெரிக்க, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் ஏகபோக உரிமையாக இருந்துவந்த அணுசோதனை ஆதிக்கம் சீனமக்களின் புரட்சிகர வெற்றியினால் திவாலாகிவிட்டது என்றும் சீனமக்களுக்கு மகத்தான அபிலாஷைகளும் லட்சியங்களும் உண்டு, அவைகளில் தலைவர் மாசேதுங் சிந்தனைகளின்படி தெளிவுடனும் ஆக்க ரீதியாகவும் வெற்றியடைவார்கள் என்றும் பீகிங் வானொலி கூறியது.

சீனமக்களின் நவீன புரட்சிகர முன்னேற்றத்தை முறியடிக்க ''சீனகுருஷே'' வும் அவருடைய கும்பலும் முயன்றதாகவும் அவைகளை புரட்சிகர மக்கள் எதிர்த்து முறியடித்தனர் என்றும் அச்செய்தி மேலும் கூறியது.

# ''சலிப்படையாதீர்''

## விவசாயிகளுக்கு கி. ச. தலைவர் வேண்டுகோள்

உடுவில், திங்கள்

''நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது போல விவசாய மக்களை சமீப கால இயற்கை நிகழ்ச்சிகள் சீர்குலைத்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகள் வேளாண்மை குன்றியிருந்த விவசாய மக்கள் இம்முறை கடவுள் கண் திறந்துள்ளார் என்ற பூரிப்பில் திளைத்திருக்க, அவர்களின் மகிழ்ச்சியில் மண்ணைக் கொட்டிச் சென்றுவிட்டது இயற்கை வெள்ளப் பெருக்கு. வெள்ளச் சேதத்தினால் சோர்வுற்றிருக்கும் விவசாயிகளை விழிப்படையச் செய்யவேண்டியது அவசியம். அரசாங்கம் இது விஷயத்தில் கூடிய சிரத்தை கொண்டு வெள்ள நிவாரணம் வழங்கவும் உருளைக் கிழங்கு, வெங்காயம் ஆகியவை பயிரிட்டவர்களுக்கு இலவசமாக விதைகாய்கள் வழங்கவும் முன்வந்திருக்கிறது. உடுவில் கிராமத்தில் சேதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நிவாரண அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உதவி பெற்றுக் கொடுக்கப்படும்'' என உடுவிலில் நேற்று மாலை நடைபெற்ற உடுவில் விவசாயிகள் பயிர்ச்செய்கைக் குழுவின் விசேஷ கூட்டத்தில் பேசிய உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் கூறினார்.

விவசாயிகள் பயிர்ச் செய்கைக் குழுத் தலைவர் திரு, எம். நாகையா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சலிப்படைந்து இருந்துவிடாது ஊக்கமுடன் விவசாயத்தில் ஈடுபடவேண்டும். இன்றில்லாவிடின் நாளையாவது நாம் பயனடைய முடியும்'' என திரு. முத்துலிங்கம் கூறினார்.

மேற்படி கூட்டத்தில் திருவாளர்கள் ஆ. ஆறுமுகம், சி. வேலுப்பிள்ளை, கா. கந்தசாமி உட்பட வேறு பல விவசாயிகளும் பேசினர்.

## உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் கூட்டம்

வவுனியா, செவ்.

வடமாகாண உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் சங்கப் பொதுக்கூட்டம் வவுனியா சி. எம். எஸ். மண்டபத்தில் தலைவர் திரு. எம். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக திரு. ஏ. மகாதேவன் தலைவராகவும், திரு. ரி. துரைராசசிங்கம் காரியதரிசியாகவும், திரு. வி. கந்தசாமி தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இரு நிர்வாக அங்கத்தவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## புதிய புகையிரத நிலையம்

திருக்கோணமலை, செவ்.

இங்கு புதிதாக அமைக்கப்படும் புகையிரதநிலையக்கட்டிடம் பூர்த்தியாகும்தறுவாயிலிருக்கின்றது. அநேகமாக இம்மாத முடிவில் திறப்பு விழா நடைபெறக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருக்கோணமலை, செவ்.

ஜனவரி மாதம் 5-ம் திகதியே இங்குள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலும், சிவன் ஆலயத்திலும் திருவெம்பாவை பூஜாரம்பமாகும்.

## பறக்கும் விமானத்தில் பிரசவம்

லண்டன், டிச. 25

விமான மூலம் மாஸ்கோ செல்லும் மார்க்கத்தில் மங்கோலிய ராஜீயப் பிரதிநிதி ஒருவரின் மனைவி குழந்தை ஒன்றைப்பிரசவித்தார்,

சுமார் 36 ஆயிரம் அடி உயரத்தில் இந்தக் கிறிஸ்மஸ் குழந்தை பிறந்தது. இந்திய டாக்டர் ஒருவர் சிகிச்சையளித்தார். மாஸ்கோ விமான நிலையத்தில் மனைவியையும் குழந்தையையும் அந்த ராஜீயப்பிரதிநிதி ஆர்வத்துடன் வரவேற்றார்.

## தீப்பிடித்தது

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலை தபால் கந்தோரில் உள்ள 'ஒட்டோ எக்ஸ்சேஞ்ச்' இயந்திரம் திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டது. இதன்விளைவாக இப்போது இங்குள்ள எந்தத் தொலைபேசிக் கருவியும் இயங்கமுடியாமல் இருக்கிறது.

இந்த சாதனத்தில் கோளாறு ஒன்று ஏற்பட்டதாகவும் அந்தக் கோளாறை உடனடியாகத் திருத்திக் கொள்வதற்கு வேண்டிய தொழிலாளிகள் தற்போது பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததினால் அக்காரியம் சாத்தியமாகவில்லையென்றும்இதனால்தான் மின்சாரம் வெளிக்கிளம்பி இத்தீயைப்பற்ற ஏதுவாக்கியதெனவும் தபால் கந்தோர் ஊழியர் ஒருவர் நமது நிருபரிடம் கருத்துத்தெரிவித்தார். இச்சம்பவத்தை ஒட்டி விஷமத்தனம் எதுவும் சந்தேகிக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

## நோயாளரை அனுமதிக்க முடியாதாம்

காங்கேசன்துறை, செவ்.

மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரியில் நோயாளர்களை அனுமதிக்க முடியாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வீசிய காற்று மழையினால் மூன்று வார்ட்டுகளிலுள்ள ஓடுகள் எடுத்தெறியப்பட்டதால் இவ்வார்ட்டுகளில் உள்ள நோயாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மொத்தம் 8 வார்ட்டுகளில் தற்பொழுது 5 வார்ட்டுகளில் மட்டும் நோயாளர்கள் இருந்துவருகின்றனர். இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கும்படி பிரதம டாக்டர், சுகாதார இலாகாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## அனுமதிகிடைத்தும் நியமனம் இல்லை

யாழ்ப்பாணம், புதன்

வடமாநில கல்வித்திணைக்களப் பகுதியினருக்கு மேலதிகமாக ஒரு காவற்காரரையும் 5 தொழிலாளர்களையும் ஒரு சைக்கிள் ஓடரியையும் நியமிப்பதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும், இதுவரையும் இப்பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென அறியப்படுகிறது.

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை தொகுதி எம்,பி. திரு. அமிர்தலிங்கம் பண்ணாகம்வடக்கு அ. மெ. பாடசாலை புதிய கட்டிடத்தை திறந்துவைத்தார். [illegible] கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது.

## தரம் உயர்வு

முரசுமோட்டை, செவ்.

முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலை மகாவித்தியாலயமாக ஜனவரியிலிருந்து தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், கராச்சி ஆசிரியர் சங்க முன்னாள் செயலாளர் திரு. சி. சிற்றம்பலம் கிளிநொச்சிப்பகுதி வாலிபர் பேரவைத் தலைவரும் சமூக சேவையாளருமான திரு. எம். எஸ். கே. இலட்சுமணன் ஆகியோர் இது சம்பந்தமாக தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர்.

## சுகாதாரமற்ற வீதி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்டதும் பெரிய கடைக்கு வெகுசமீபத்தில் இருப்பதுமான முன்னேஸ்வரன் வீதியை ஊடறுத்துச் செல்லும்வீதி சுகாதாரநிலையற்றுக் கிடக்கின்றது.

மேற்படி வீதிபற்றி யாழ்ப்பாண மாநகரசபையினர் அசிரத்தையாக இருப்பதாகவும் இதுபற்றி பலமுறை கமிஷனர்களுக்கு புகார் செய்தும் பயன்கிடைக்கவில்லையென்றும் குறிப்பிட்ட இடத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆங்கில ஆசிரியர் இல்லை

அச்சுவேலி, செவ்.

கடந்த ஒரு வருடகாலமாக பத்தமேனி இரத்தினேசுவரி வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லை. இதனால் இப்பகுதி மாணவர்கள் தமது ஆரம்ப ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்கு மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

பத்தமேனி கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. தா. சிவலிங்கம் கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளைமூலம்ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமிக்கும்படி வித்தியாதிபதியைக் கோரியுள்ளார்.

## 'கலைச்சொல் ஆக்கம்'

### கிளிநொச்சிஎம்.பி.யின் ஆய்வுரை

யாழ்ப்பாணம், புதன்

சென்னையில் நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பேராளராகக் கலந்துகொள்ளும் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் 'கலைச்சொல் ஆக்கம்' என்னும் தலைப்பில் ஆராய்ச்சி உரை நிகழ்த்துவார். ஜனவரி முதலாம் திகதி இவர் இங்கிருந்து புறப்படுவார்.

## யாழ். உதைபந்தாட்ட சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 9-ம் திகதி நடைபெறவிருந்த யாழ்ப்பாண உதைபந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்காரணத்தாலும்சங்ககணக்குகள் கணக்குப் பரிசோதகரால் கணக்குப் பரிசோதனை செய்து முடியாமையாலும் எதிர்வரும் 7-1-68க்கு பின்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று இக்கூட்டம் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நடைபெறுமென செயலாளர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## போட்டியிலிருந்து விலகினர்

சுன்னுகம், புதன்

சுன்னுகம் பட்டினசபை தேர்தலில் 7-ம் வட்டாரத்தில் போட்டியிடவிருந்த திரு. எல்லுப்போலை அரசரத்தினம் போட்டியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## வெள்ளத்தை தடுக்க யோசனை

அச்சுவேலி, செவ்வாய்

சங்கானையிலிருந்துவல்லைக் கடலை நோக்கிவரும்வெள்ள வாய்க்காலைப் புனரமைப்புச்செய்துதரும்படி பத்தைமேனி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சார்பில் இப்பகுதி மக்களால் கையொப்பமிடப்பட்ட மகஜரொன்று அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வெள்ளவாய்க்கால் சீராக அமைந்திருப்பின் இப்பகுதி கடந்த வெள்ளப் பெருக்கின்போது பாதிக்கப்படமாட்டாதென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## விவசாயிகள் கோரிக்கை

வவனியா, செவ்வாய்

வவனியாவில்தொடர்ந்து பெய்த மழையினால் 150 ஏக்கர்வரை உருளைக்கிழங்கு உற்பத்தி அழிந்துவிட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது போலத் தமக்கும் உருளைக்கிழங்கு வழங்கவேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர்.

## வடபகுதியில்......

(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆசிரியர் பட்டியல் ஒன்று வட மாநில கல்வி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திணைக்களப் பகுதியில் சென்ற வாரம் கிடைத்த இவ் இடமாற்றப்பட்டியலில் 146 பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் மாத்திரம் தான் இடம் பெற்றுள்ளனராம். இன்னுமொரு இடமாற்றப்பட்டியல் விரைவில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. எப்படியாயினும் நிச்சயமாக வெளிஇடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கு ஈடான ஆசிரியர்கள் இங்கு அனுப்பப்படமாட்டார்கள் என நம்பப்படுகிறது.

வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சில ஆசிரியர்களின் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டாலும் நிரப்பப்படாத வெற்றிடங்கள் இருந்தே தீரும். இந்த ஆசிரியர் பற்றுக்குறையை நீக்க எதிர்வரும் பெப்ரவரியில் நியமனம் பெறவிருக்கும் மாணவ ஆசிரியர்களின் தொகையை அதிகரிப்பதற்கு வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிசெய்து வருவதாகக்கூறப்படுகிறது.

## விதைகிழங்குபற்றி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை என்றும் விதைகிழங்கு அந்தர் ஒன்று ரூபாய் 67-20 சதத்திற்கு வேண்டியவர்களுக்கு விற்கும் படியும் தமக்கு உத்தரவு வழங்கப்பட்டிருப் பதாகவும் விவசாயப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விதைகிழங்கு வேண்டிய பயிர்ச்செய்கையாளர் உடனடியாக விவசாயப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 27 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org